1990, மே 3, வியாழக்கிழமை.

சித்திரை 20, பிரமோதூத— திருவள்ளுவர் ஆண்டு— 2021.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்.''

நீதிமுறை செய்து, குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்குத் தலைவன் என்று தனியே கருதி மதிக்கப்படுவான்.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம்.

*3795 திரு. எல். மூக்கையா :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளத்தில் துணை நீதிமன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். மூக்கையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தில் துணை நீதிமன்றம் அங்குள்ள உரிமையியல் நீதிமன்றக் கட்டிடத்தில் ஒரு சிறிய அறையிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. மதுரை மாவட்டத்திலுள்ள சீனியர் வழக்கறிஞர்கள் பெரியகுளம் துணை நீதிமன்றத்திற்கு வருகிறார்கள். உட்காரக் கூட இடம் இல்லாமல் வழக்கறிஞர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். கடந்த கால ஆட்சியில் அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமாக புதிய கட்டிடம் கட்ட....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரடியாகக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. எல். மூக்கையா : கடந்த கால ஆட்சியில் அங்குள்ள வழக்கறிஞர்கள் சங்கத்தின் மூலமாக புதிய கட்டிடம் கட்ட முயற்சித்தும் நடைபெறவில்லை. எனவே, நமது அரசு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 15.20 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு துணை நீதிமன்றம் கட்ட வேண்டும் என்ற குறிப்பு உயர்நீதிமன்றத்திலிருந்து அரசிற்கு வந்திருக்கிறது. அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. நிதிநிலை காரணமாக இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக்கொள்ள இயலவில்லை.

கைதிகளுக்கான உணவுப்படியை உயர்த்துதல்

*7041. பேராசிரியர் க. பொன்னுசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் வரை இடைப்பட்ட காலத்திற்கு கைதிகளுக்கான உணவுப் படியை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?